# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2023-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 06-ஆம் நாள், திங்கட்கிழமை

**I.A. No. 705 of 2018 in O.S. No. 9 of 2008**
**(CNR No. TNSA-1300-0124-2008)**

1. குமரவேல்
2. வடிவேல் .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிர்

1. ஆதிமூலம்
2. பன்னீர்செல்வம்
3. சங்கர் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 09.10.2023-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை 10.08.2017 தேதியன்று தாவா நடைபாதையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எழுப்பியுள்ள கழிவறைக்கான கட்டுமானத்தை இடித்து அகற்ற இடைக்கால தடை உத்தரவு வேண்டி தாக்கல் செய்திருப்பாகக் கூறியுள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர்கள் / வாதிகள் தன்னுடைய மனுவில், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வேண்டி இடை மனு எண் 18/2008 மற்றும் 19/2008 ஆகிய இரண்டு இடைக்கால தடை உறுத்துக்கட்டளை கூறி மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்ததாகவும், இந்நீதிமன்றமும் 22.08.2008 தேதியிட்ட பொது உத்தரவின் அடிப்படையில் இடைக்கால தடை உத்தரவு வழங்கி உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அவ்வுத்தரவின் மீது ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த C.M.A. மனு எண் 2/2008, 26.08.2009 தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் மூலம் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் நடந்து கொண்டதாகவும், அதற்காக தான் அவர்கள் மீது நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும், 10.08.2017 தேதியன்று தாவா பாதையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கழிவறைக்கான கட்டுமானத்தை எழுப்பியதாகவும், இது சம்மந்தமாக 15.08.2017 தேதியன்று காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகவும், நீதிமன்ற உத்தரவை மீறி எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் செயல்பட்டிருப்பதால் எழுப்பப்பட்ட கட்டுமானத்தை இடித்து அகற்ற இடைக்கால தடை உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

3. **<u>3-ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய எதிருரையில், மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், தாங்கள் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவை மீறியதாக கூறியிருப்பது பொய் என்றும், 10.08.2017 தேதியன்று தாவா சொத்தில் கழிவறை கட்ட கட்டுமானம் எழுப்பியிருப்பதாக கூறுவது பொய் என்றும், இது தொடர்பாக மனுதாரர்கள் / வாதிகள் எவ்வித சாட்சியத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும், எந்த

கட்டுமானமும் எழுப்பவில்லை என்றும், மேல்மாடிக்கு செல்லக்கூடிய படிக்கட்டுகளின் அடியில் தான் கழிவறை இருந்ததாகவும், அது காலபோக்கில் சேதமடைந்துவிட்டதால் பழைய கழிவறையை தான் புதுப்பித்து படிகட்டுக்களுக்கு அடியில் தாங்கள் கட்டியதாகவும், பொய்யான ஒரு புகாரை தங்கள் மீது காவல்துறையில் மனுதாரர்கள் / வாதிகள் கொடுத்திருப்பதாகவும், பிரச்சனைக்குரிய இடத்தில் ஒரு இஞ்ச் அளவு இடத்தைக்கூட கட்டுமானத்திற்கு தாங்கள் பயன்படுத்தவில்லை என்றும், மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள் / வாதிகள் தாவா சொத்து பாதையைப் பொறுத்து விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது. இடை மனு எண் 18/2008 மற்றும் 19/2008-ல் 18.02.2008 தேதியிட்ட பொதுவான உத்தரவின் மூலம் இந்நீதிமன்றம் மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு தாவா பொது வண்டிப் பாதையைப் பொறுத்து அதனை பயன்படுத்தி வருவதை இந்த வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இடையூறு செய்யவோ, தடை ஏற்படுத்தவோ கூடாதென இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கியும், மனுதாரர்கள் / வாதிகள் தாவா பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கு முடியும் வரையிலும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இடையூறு ஏற்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியும் உத்தரவிட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாவா பாதையில் கழிவறை கட்டுவதற்கு கட்டுமானம் எழுப்பியுள்ளதாக கூறிவிட்டு அதனை தாவா பாதையிலிருந்து அகற்றி அப்புறப்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் எதற்காக வேண்டியுள்ளனர் என்பது குறித்த காரணம் எதுவும் மனுவில் கூறவில்லை. மேலும் இந்நீதிமன்றத்தின் இடை மனு எண்கள் 18/2008, 19/2008-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீறியது சம்மந்தமாக நீதிமன்ற உத்தரவை அவமதித்த செயலுக்காக எந்தவித மனுவையும் தற்போது வரையிலும் மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல்

செய்யவில்லை. எனவே உண்மையிலேயே எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவை மீறினார்களா என்ற ஐயம் எழுகிறது. மேலும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாவா பாதையில் கழிவறை கட்டுவதற்காக கட்டுமானத்தை இடையூறாக ஏற்படுத்தியுள்ளதாக மனுதாரர்கள் / வாதிகள் கூறியுள்ளது சம்மந்தமாக எந்தவித ஆவண சாட்சியமும் மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை. புதியதாக எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் எழுப்பப்பட்டுள்ள கட்டுமானத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் பெறவேண்டி இம்மனுவிலேயே இடை மனு எண் 309/2018-ஐ மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்து இந்நீதிமன்றம் அம்மனுவில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தின் மூலம் தாவா பாதையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித கட்டுமானமும் எழுப்பவில்லை என்பது தெரியவருகிறது. எனவே எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிக்ள் தங்களுடைய எதிருரையில் கூறியிருப்பது போல தாவா பாதையில் அவர்களால் எவ்வித கட்டுமானமும் எழுப்பவில்லை என்பது நிரூபணமாகியுள்ளதாக இந்நீதிமன்றம் கருதி மனு சங்கதிகள் உண்மையென ஏற்க இயலாது என்று கருதி இந்நீதிமன்றம் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

6. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 06-ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |
| <u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |
| <u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> | இல்லை |
| <u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u> | இல்லை |
| <u>நீதிமன்ற சாட்சிகள் </u>: | இல்லை |
| <u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : | இல்லை |

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>**

**இ.ம.வ. எண் 705/2018**

----------------

**அ.வ. எண் 9/2008**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 06.11.2023.